முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 17.03.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண்.109/2025**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஷ்குமார் | மாவட்டம் | : | காஞ்சிபுரம் |
| த/பெ | : | ஜெயபால் | வயது | : | 42 |
| ஊர் | : | ஓரிக்கை | தொழில் | : | சிறுதொழில் |

**வா.சா. 1 (சதீஷ்குமார்) : வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் **வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

**கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 24.04.2008 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
2. 23.05.2025 தேதியிட்ட 1ம் பிரதிவாதியால் வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரயப்பத்திரம் இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
3. செய்யாறு காவல் நிலையத்தில் 25.05.2025 அன்று கொடுக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை இணையம் மூலம் பெறப்பட்ட நகல் **வா.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
4. 14.07.2025 தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வாதிக்கு வழங்கப்பட்ட முன் ஜாமீன் தீர்ப்பின் உத்தரவின் இணையம் மூலம் பெறப்பட்ட நகல் **வா.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
5. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண் 2218 இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
6. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண் 2225 இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா. சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
7. வாதி பெயரில் உள்ள பட்டா எண் 2252 இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
8. 31.01.2026 தேதியிட்ட செய்யாறு காவல் நிலையத்தில் வாதியால் கொடுக்கப்பட்ட புகார் மனு நகல் **வா.சா.ஆ.8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

9. 31.01.2026 அன்று கொடுக்கப்பட்ட புகாரின் இணையம் மூலம் பெறப்பட்ட ஒப்புகை நகல் **வா.சா.ஆ.9 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

10. 31.01.2026 அன்று எடுக்கப்பட்ட புகைப்படத்தின் நகல் (பிரிவு 63 சான்றிதழோடு தாக்கல் செய்யப்பட்டது) **வா.சா.ஆ.10 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

11. வழக்கு சொத்தில் ஏற்பட்ட பிரச்சனைகளை புகைப்படத்தின் நகல்கள் Pendrive வில் கொடுக்கப்பட்டது (பிரிவு 63 சான்றிதழோடு தாக்கல் செய்யப்பட்டது) **வா.சா.ஆ.11 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.17 18:34:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு